# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

**අති විශෙෂ**

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 1816/32 - 2013 ජුනි මස 28 වැනි සිකුරාදා - 2013.06.28

*1816/32 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1670/32 மற்றும் 1783/37 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவை பிரமாணக் குறிப்பு*

*2010.09.10 ஆந்திகதிய 1670/32 இலக்கம் மற்றும் 2012.11.09 ஆந்திகதிய 1783/37 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவை பிரமாணக் குறிப்பின் 10:3:1 ஆம் பிரிவு பின்வருமாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் திருத்தம் செய்யப்படுகின்றது.*

*10:3: 1 பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்யும் தரம் I ஐச் சேர்ந்த அலுவலர்களை பதவி உயர்த்துவதன் ஊடாக மாத்திரம் விசேட தரத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்வு செய்யப்படுகின்றது.*

I. *குறித்த துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். (பின்னிணைப்பு "உ" வில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்).*

II. *பதவி உயர்வு தொடர்பான தகைமைகளை பூர்த்தி செய்யும் தினத்தன்று நிறைவேற்று உத்தியோகத்தர் தரம் I இல் 05 வருடங்கள் தொடர்ச்சியாகவும் திருப்திகரமாகவும் சேவையாற்றி இருத்தல் மற்றும் தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்ட பின்னர் 05 வருட காலப் பகுதியினுள் சம்பள ஏற்றங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.*

III. *பதவி உயர்விற்காக தகைமைகளை பூர்த்தி செய்யும் தினத்தன்று தகைமை பெறும் சேவையில்/பதவிகளுக்குரிய நிறைவேற்று உத்தியோகத்தர் தரத்தில் 18 வருட சேவைக் காலங்களுக்கு குறையாதவாறு தொடர்ச்சியாக சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.*

IV. *பதவி உயர்விற்காக தகைமை பெறும் தினத்திற்கு முந்திய 05 வருடங்களில் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமானதாக அல்லது அதற்கு மேலான மட்டத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.*

V. *பதவி உயர்விற்கான தகைமைபெறும் தினத்திற்கு முந்திய 05 வருடங்களுக்குள் திருப்திகரமான சேவைக் காலமொன்று இருத்தல் மற்றும் ஒழுக்காற்று தண்டனை ஒன்றிற்கு ஆளாகாது இருத்தல்.*

**பதவி உயர்வு முறைமை :**

*அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தி சேவை மூப்பு மற்றும் திறமை என்பவற்றினைக் கவனத்திற் கொண்டு நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப பதவி உயர்வு வழங்கப்படும்.*

*ரீ. எம். எல். சந்திராணி சேனாரத்ன,*
*செயலாளர்,*
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,*
*கொழும்பு 05,*
*2013, யூன் 28.*

*7- 259*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*